உ
# அருள்மிகு ஓம் ஸ்ரீ பவானி அம்மன் திருக்கோயில்
பெரியபாளையம், ஊத்துக்கோட்டை வட்டம்
திருவள்ளூர் மாவட்டம் 601 102.
தொலைபேசி 044–27927177, அலைபேசி 9444 487 487
மின்னஞ்சல் : periyapalayambhavaniamman@gmail.com
வலைதளம் www.omsribhavaniammantempleperiyapalayam.org

## பொது ஏல விளம்பர அறிவிப்பு

இத்திருக்கோயிலின் இருப்பில் உள்ள பிரதமை டின் கண்மலர்கள், பல உருவங்கள் எடை 1985.800 கிலோ கிராம் விற்பனை செய்வதற்கான பொது ஏலம் 28.06.2018 பிற்பகல் 3.00 மணியளவில் இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகள் முன்னிலையில் கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு இத்திருக்கோயில் அலுவலகத்தில் பகிரங்கமாக பொது ஏலம் விடப்படும்.

### ஏல நிபந்தனைகள்

1. ஏலம் கேட்பவர்கள் ரூ. 20,000/– (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) க்கான வைப்புத் தொகையினை ரொக்கமாக இத்திருக்கோயிலில் செலுத்தி ஏலம் கேட்கவேண்டும். ஏலம் எடுத்த நபர் தவிர இதர நபர்களின் வைப்புத்தொகைகள் ஏலம் முடிந்தவுடன் திருப்பி கொடுக்கப்படும்.

2. ஏலம் கேட்பவர்கள் திருக்கோயில் வளாகத்தில் உள்ள ஏலத்திற்காக வைக்கப்பட்டுள்ள பிரதமை டின் கண்மலர்கள், பல உருவங்க பார்வையிட்டே டெபாசிட் தொகையை செலுத்த வேண்டும்.

3. ஏலம் கேட்பவர்கள் கிலோ ஒன்றுக்கு என்ற அடிப்படையில் ஏலம் கேட்கவேண்டும்.

4. ஏலம் எடுத்தவர் முழுத்தொகையும் ஏல தினத்தன்றே திருக்கோயிலில் செலுத்திவிட வேண்டும்.

5. ஏலம் எடுத்தவர் நிபந்தனை எண் 4ன்படி தொகை செலுத்த தவறினாலோ, ஏல நிபந்தனைகளை மீறினாலோ அன்னாரின் ஏலம் ரத்து செய்யப்படுவதுடன் மறு ஏலம் நடத்தப்படும். மறு ஏலத்திற்கு கொண்டு வருவதானால் திருக்கோயிலுக்கு ஏற்படும் சகல இழப்புகளையும் மேற்படி ஏலதாரரே பொறுப்பாக்கப்படுவர். மறு ஏலத்திற்கு அதிக தொகைக்கு சென்றால் அதில் பங்குகோர மேற்படி யாருக்கும் உரிமையில்லை. மேலும் டெபாசிட் தொகையை ஆலய உடமையாக்கப்படும்.

6. குத்தகை பாக்கியுள்ளவர்கள், திருக்கோயிலுக்கு எதிராக வழக்காடியவர்கள், திருக்கோயிலுக்கு பாக்கி செலுத்த வேண்டியவர்கள் ஏல நிபந்தனைகளுக்கு கட்டுப்பட மறுப்பவர்கள் ஏலத்தில் கலந்துக்கொள்ள தகுதியற்றவர்கள் ஆவார்.

7. உயர்ந்த கேள்விதாரருக்கு ஏலம் முடிவு செய்யப்படும். திருக்கோயில் நலன் கருதி எந்த கேள்வியையும் ஏற்றுக்கொள்ளவோ, நிராகரிக்கவோ, எந்த ஏல தாரரையும் நடவடிக்கையிலிருந்து நீக்கவோ, திருக்கோயில் நிர்வாகத்திற்கு முழு அதிகாரம் உண்டு.

8. வெற்றி பெற்ற ஏலதாரர்கள், அறநிலையத்துறை அனுமதி வந்தவுடன் திருக்கோயில் வளாகத்திலிருந்து ஏலம் விடப்பட்ட பிரதமை டின் கண்மலர்கள், பல உருவங்கள் எடை சரிபார்த்து சொந்த செலவில் அப்புறப்படுத்திக் கொள்ளவேண்டும்.

9. அரசுக்கு செலுத்த வேண்டிய எந்த வித வரிகளையும் ஏலம் உறுதி பெற்றவர்கள் தன் சொந்த பொறுப்பில் செலுத்திட வேண்டும்.

10. பொது ஏலம் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அவர்களின் ரத்து, அங்கீகாரத்திற்கு உட்பட்டது.

11. ஏலம் கேட்பவர்கள் நிபந்தனைகளை நன்கு அறிந்து கேட்பதாக கருதப்படும்.

12. திருக்கோயிலின் நன்மையைக் கருதி காரணம் ஏதும் கூறாமல் ஏலத்தை நிராகரிக்கவோ, நிபந்தணைகளை சேர்க்கவோ, தளர்த்தவோ, ஏலத்தை ஒத்திவைக்கவோ, திருக்கோயில் செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு.

13. இதர நிபந்தனைகள் ஏதேனும் இருப்பின் ஏலம் விடுவதற்கு முன்பு தெரிவிக்கப்படும்.

**திரு. ச. வேலரசு,**
செயல் அலுவலர்.

**திரு. அஞ்சன் லோகமித்ரா,**
பரம்பரை மேலாளும் அறங்காவலர்.

நாள் : **11.06.2018**
இடம் : பெரியபாளையம்